# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 83 — 1973 ඔක්තෝබර් 26 වැනි සිකුරාදා —1973.10.26

83 ம் இலக்கம்—1973 ம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 26 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி II—சட்டசம்பந்தமானது

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| மசோதா .. .. | — | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் .. | — |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | — | பிசுக்கால் விற்பனைபற்றிய அறிவித்தல்கள் | — |
| உச்சமன்ற அறிவித்தல்கள் .. .. | — | மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | — |
| உச்சமன்ற குற்றவிசாரணைகள்பற்றிய அறிவித்தல்கள் | — | சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | — |
| மாவட்ட மன்ற, சிறிய மன்ற அறிவித்தல்கள் | — | நொத்தாரிசுமார் நிரல் .. | — |
| கடனிறுக்க முடியாமைக்காய வழக்குகளின் அறிவித்தல்கள் | — | நானுவிதம் .. | 55 |


## நானுவிதம்

### ஸ்ரீ அநுராதபுரம் பஸ்தியான் யாத்திரிகர் விடுதி முகாமைச் சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

திரு. ஈ. எல். சேனநாயக்க ஆகிய யான் இலங்கைத் தேசிய அரசுப் பேரவையின் 52 ஆம் இலக்க நிலையற் கட்டளையின்கீழ் "ஸ்ரீ அநுராதபுரம் பஸ்தியான் யாத்திரிகர் விடுதி முகாமைச் சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்" எனப்படும் ஒரு சட்டமூலத்தை மேற்குறித்த தேசிய அரசுப் பேரவையில் அறிமுகம்செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் நோக்கங்களைக் கொண்டு மேற்குறித்த சங்கத்தைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் குறிக்கோளாம் :—

(அ) ஸ்ரீ அநுராதபுரம் பஸ்தியான் யாத்திரிகர் விடுதி எந்நோக்கங்களோடும் குறிக்கோள்களோடும் தாபிக்கப்பட்டதோ அவற்றுக் கிணங்க அந்த யாத்திரிகர் விடுதியைப் பௌத்தர்களின் உதவியுடன் திறமையாகப் பேணிவரலும் முகாமைசெய்தலும், சென்ற ஐம்பது ஆண்டுகளாகச் சொல்லப்பட்ட யாத்திரிகர் விடுதி பேணப்பட்டு வருவதில் அடிப்படையாகக் கைக்கொள்ளப்பட்டுவந்த பௌத்த அடிப்படைக் கோட்பாடுகளைச் செய்முறையில் அனுட்டிக்கப்படுவதனை உறுதிசெய்தலும்;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் அலுவல்களைக் கட்டுப்பாடு செய்வதனையும் முகாமை செய்வதனையும் செயற்குழுவுக்கு உரித்தாக்குதல் முதலியன.

ஈ. எல். சேனநாயக்க,
கண்டிப் பாராளுமன்ற உறுப்பினர்.

10–1012—26.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 83

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள், சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்குத் திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஞ் மே மீ 5 ந உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

---

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

### அட்டவணை 1973

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| ஒற்றோபர் | .. | 05.10.73 | வெள்ளி | .. | 28. 9.73 | வெள்ளி | .. | ந.ப. 12.00 |
| | | 12.10.73 | வெள்ளி | .. | 05.10.73 | வெள்ளி | .. | ந.ப. 12.00 |
| | | 19.10.73 | வெள்ளி | .. | 12.10.73 | வெள்ளி | .. | ந.ப. 12.00 |
| | | 26.10.73 | வெள்ளி | .. | 19.10.73 | வெள்ளி | .. | ந.ப. 12.00 |
| நவெம்பர் | .. | 02.11.73 | வெள்ளி | .. | 26.10.73 | வெள்ளி | .. | ந.ப. 12.00 |
| | | 09.11.73 | வெள்ளி | .. | 02.11.73 | வெள்ளி | .. | ந.ப. 12.00 |
| | | 16.11.73 | வெள்ளி | .. | 09.11.73 | வெள்ளி | .. | ந.ப. 12.00 |
| | | 23.11.73 | வெள்ளி | .. | 16.11.73 | வெள்ளி | .. | ந.ப. 12.00 |
| | | 30.11.73 | வெள்ளி | .. | 23.11.73 | வெள்ளி | .. | ந.ப. 12.00 |
| திசெம்பர் | .. | 07.12.73 | வெள்ளி | .. | 30.11.73 | வெள்ளி | .. | ந.ப. 12.00 |
| | | 14.12.73 | வெள்ளி | .. | 07.12.73 | வெள்ளி | .. | ந.ப. 12.00 |
| | | 21.12.73 | வெள்ளி | .. | 14.12.73 | வெள்ளி | .. | ந.ப. 12.00 |
| | | 28.12.73 | வெள்ளி | .. | 21.12.73 | வெள்ளி | .. | ந.ப. 12.00 |

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆல் ஓகத்து மீ 18 ந வ.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.